உ
சிவமயம்

"தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

நகரத்தார் சங்கம்

பதிவு எண் 16/1956

மதுரை

ஆறுவது ஆண்டு அறிக்கை

26-8-1962

★

1961 - '62

செயற்குழு

தலைவர் : திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார்

துணைத்தலைவர்கள் : திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார்

செயலர் : ஆவி. க. மெ. அரு. தியாகராசன் செட்டியார்
சுப. அண்ணாமலை.

பொருட்காப்பாளர்:
திரு. இராம. ஆறு. சுப்பிரமணியன் செட்டியார்

உறுப்பினர்கள்

திரு. தி. சுந்தரம் செட்டியார்
" தி. மாணிக்க வாசகம் செட்டியார்
" லெ. நாராயணன் செட்டியார்
" நா. சுப. கா. சுப்பிரமணியன் செட்டியார்
" மெ. சு. உ. சுப. வே. வேலாயுதம் செட்டியார்
" நா. சுப. நாகப்ப செட்டியார்
" சி. க. அரு. சோம. இராமநாதன் செட்டியார்
" சுப. அ. நடராசன் செட்டியார்
" AR. L. இராமநாதன் செட்டியார்
" RM. முத்துப்பழனியப்ப செட்டியார்
" பழ. லெ. நடராசன் செட்டியார்
" KR. சேதுராமன் செட்டியார்
" கும. நா. சுப. நா. மாணிக்கம் செட்டியார்
" நா. சு. சுப்பிரமணியன் செட்டியார்
" AL. மாணிக்கம் செட்டியார்
" டாக்டர் S. சண்முகம் செட்டியார்
" செ. செல்லப்பன்
" அ. அருணாசலம் செட்டியார்
" T. தேனப்ப செட்டியார்
" AR. சேதுராமன் செட்டியார்
" A. இராமநாதன் செட்டியார்
" சொ. அருணாசலம் செட்டியார்
" PR. உடையப்பன்
" இராம. சேதுச்செட்டியார்
" நா. அ. ராம. கா. இராமநாதன் செட்டியார்

உ

சிவமயம்.

நகரத்தார் சங்கம், மதுரை

(பதிவு எண். 16/1956.)

25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

ஆறாவது ஆண்டு அறிக்கை

வணிகர் குலம் வாழ வந்துதித்த பெரியோரே,

வருக. வருக.

தங்கள் வரவு நல்வரவாகுக. தங்கள் பொன்னடிக்கு எங்கள் வணக்கம் உரியதாகுக.

அருமையில் எளிய அழகாய் ஆலவாய்க்கண் வீற்றிருந்தருளும் அங்கயற்கண்ணம்மையின் திருவுள்ளம் ஆறுண்டுகட்கு முன், நம் வணிகர்குடி உயர இந்நகரில் இச்சங்கம் தோன்றுதற்கு அருள் பாலித்தது. அவள் திருப்பெயராலேயே ஆலே தோற்றுவித்து "அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்" என்ற பொன் மொழிக்கேற்ப வளம் பெருக்கிவாழும் திரு. கருமுத்து. தியாகராஜன் செட்டியார் அவர்கள் நம் சங்கத்திற்குத் தலைவராக வாய்த்தார்கள். அவள் திருவருள் இன்னும் பாலிக்கும்; நம் சங்கம் ஆறுண்டுகள் வளர்ந்ததே போல நூறுண்டுகள் வளரும்; பன்னூறு மாணவர் கட்குக் கல்விச் செல்வமும் வாழ்க்கை வழியும் தேடித்தரும் என்னும் நம்பிக்கையுடையோம்.

நம் வணிகர் குடி தொன்மையான குடி. தமிழகத்தின் பண் பாட்டு வரலாற்றிலும் சமய வரலாற்றிலும் அழியா இடம் பெற்ற குடி. கல்லெல்லாம் கவி பாடும் கலையழகு மிக்க தமிழகத்துக் கோயில்களைப் பழம்பெருமை குன்றுமல் திருப்பணிசெய்து புதுக்கிய தோடு நித்தல் வழிபாடும் திருவிழாக்களும் நிகழச்செய்த பெருமை நம் குடியினர்க்கு உண்டு. நம் தமிழகத்துப் பண்பாட்டைக் கடல் கடந்த மலேயா நாட்டிலும், தாய்லாந்து, பர்மா நாடுகளிலும், சுற்றியுள்ள சிறு தீவுகளிலும் பரப்பிய பெருமையும் நப்மவர்க்கு உண்டு. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை; அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு" என்னும் வள்ளுவர் மொழிகளை நன்குணர்ந்தவர் நம் குடியினர்.

பொருள் ஈட்டுவதில் மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சாராகி, மிகு செல்வம் தொகுத்து, "செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்போம் எனினே தப்புந பலவே" (செல்வத்தினுல் வரும் ஒரே பயன் வாரி வழங்குதல்தான்; நாமே அதை அனுபவிப்போம் என்று எண்ணினுல் பல தவறுகள் வந்து சேரும்) என்னும் நக்கீரர் கருத்தை நன்குணர்ந்து பல அறங்களுக்கும் வரையாது வழங்கினுர்கள்.

இத்தகைய பெருங்குடி அயல் நாட்டு வாணிகம் குன்றியதனுல் பெரிதும் தளர்ந்து விட்டது. வளம் கொழித்த செட்டி நாட்டில் இன்று வறுமை அரசோச்சுகிறது. எனினும் சங்க காலம் தொடங்கி எத்தனையோ காலங்களைக் கண்டு தலைநிமிர்ந்து நின்ற நம் குடி இன்றைய நிலை கண்டு ஒடுங்கிவிடாது. முன்னேர் தவ வலியாலும் முக்கண்ணன் அருள் வலத்தாலும், முயற்சி மிகுதியாலும் முன்னேற்றப்பாதையில் பீடு நடையிட்டுச் செல்லும் என்பது உறுதி. அதற்கோர் அடையாளமே மதுரையில் தோன்றியுள்ள நம் சங்கம். நம் சங்கத்தின் ஆறாண்டு வளர்ச்சி பல செல்வப் பெருமக்களின் உள்ளத்தில் சமூகப்பணி செய்யும் ஆர்வத்தை உண்டாக்கியிருக்கிறது. ஆறுமாதங்களுக்கு முன்பு தான் ரூ 101/– சந்தாச்செலுத்தும் 'வாழ்நாள் உறுப்பினர் சேர்க்கும் வேலையைத் தொடங்கினேம். இன்று வரை 65 பேர் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர். மதுரை மாநகரிலும் ஏனைய நகரங்களிலும் தொழில் புரியும் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் "எழுத்தறிவித்தவன் இறைவனுகும்." என்ற முதுமொழிக் கேற்பத் தங்கள் பெயரால் ரூ. 101/- விதம் கொடுத்துக் கல்விப்பணியைக் கடவுட் பணியாகக்கொள்ள வேண்டுகிறேம். இன்று வரை வாழ்நாள் உறுப்பினரானவர்களின் விவரம் பிறிதொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

விசயா அச்சுக்கூடத்தை நடத்திவரும் பள்ளத்தூரைச் சேர்ந்த திரு. கே. இராமன் அவர்கள் நம் சங்கத் தொடர்பான எல்லா அச்சு வேலைகளையும் ஊதியம் இன்றிச் செய்து கொடுக்க உவகையுடன் முன் வந்து. சென்ற ஓராண்டாக இப்பெரும் பணியினைச்செய்து வருகிருர்கள். சங்கத்தின் வளர்ச்சியில் அவர்கள் காட்டிவரும் ஆர்வத்தை மிகவும் பாராட்டுவதோடு அவர்களின் பேருதவிக்குச் சங்கத்தின் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

மற்றுமொரு பெரிய நற்செய்தி. நம் சங்கத்தலைவர் திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் நம் குடியினரில் திருமணமாகாமல் இருக்கும் பெண்களின் துயரைத்துடைக்க. ஊருக்கு ஒரு பெண்ணிற்குத் திருமணச் செலவுக்காக ரூ. 1500/- தர மனமுவந்து முன்வந்துள்ளார்கள். அதன்படி கீழச்சிவற்பட்டி திரு. அரு. அண. சுப. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி வள்ளியம்மை, கல்லல் லெ. கண. நா. நா. நாச்சியப்ப செட்டியார் புதல்வர் நா. கருப்பஞ் செட்டியார். இவர்கள் திருமணத்திற்கு பி. அளகாபுரி நகரத்தார் நல உரிமைச் சங்கத்தலைவர் மூலமாக ரூ. 1501/- கொடுத்து உதவினுர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

அம்மட்டோ! கலைத்தந்தை அவர்கள் தம் அறநிறுவனத்தின் மூலம் இன்றுவரை ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் வரை தொழிற்கல்விக்கும், கலைக்கல்விக்கும் உதவியிருக்கிறார்கள என்பதை நினைக்கும் பொழுது நம் உள்ளமெல்லாம் நெக்கு நெக்காக உருகுகிறது. மேலும் இப்பெருந்தகையின் சீரிய முயற்சியால் சங்கம் வளர்ந்த இவ் ஆலவாயின் கண் பல்கலைக் கழகம் விரைவிலே தோன்றும் வாய்ப்பையும் ஒவ்வொரு கணமும் நாம் எதிர்நோக்கியிருக்கின்றோம். ஏன்? தமிழகமே அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளக் காத்திருப்பது நாள் தோறும் வெளிவரும் நாளேடுகளிலிருந்து தெரியவருகிறதன்றோ? அவர்கள் பணி சிறக்க அங்கயற்கண்ணி உடனிருப்பாள் என்பதில் ஐயமில்லை.

அவர்களின் கொடையினை மனமாரப் பாராட்டுகிறோம். மற்ற செல்வப் பெருமக்கள் அவர்களைப் பின்பற்றி வறிய குடும்பத்தில் பிறந்து மணத்திற்கு வழியில்லாமல் இருக்கும் பெண்களை வாழவைக்கும்படி வேண்டுகிறோம். திருமண நிதியென்றே தனியாக நம்சங்கத்தின் சார்பாக ஒரு நிதிதிரட்டி இப்பெரும்பணியைச் செய்ய எண்ணியுள்ளோம். இன்று வரை நமது பெருமக்களிடமிருந்து பெற்ற புதுமை, கல்யாணம், சாந்தி மகமைத்தொகைகளை இந்த நிதிக்கணக்கிலேயே வரவு வைத்துள்ளோம். அதன் விரிவு பிறிதொரு பக்கத்தில் காண்க. நம் நகரத்தார் மரபினர் தம் வீட்டு விசேடங்களில் கோவிலிற்குப் பாக்குவைப்பது போல நம் சங்கத்திற்கும் தவறாது செய்யும் ஒரு கடமையாக எண்ணி ரூ 11/-க்குக் குறையாத பெருந்தொகை கல்யாண மகமையாகக் கொடுத்து வந்தால் நமது சங்கத்தின் திருமண நிதி வெள்ளம்போல் பெருகும். இதிலிருந்தே வறிய நிலையில் உள்ள பெண்களுக்குத் திருமணம் செய்விக்கப் பணம் கொடுத்து உதவலாம்.

நம் சங்கத்தின் தொடக்க காலத்தில் வள்ளல், டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் புரவலர்களுள் ஒருவராக இருந்து வந்தார்கள். அவர்கள் மறைவுக்குப் பின்னர்ச் சென்ற ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் சென்னைத் தொழிலதிபர் திரு. அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள் புரவலராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். நம்மிடையே வள்ளல் அழகப்பர் அவர்கள் இல்லாத குறையை அதிபர் முருகப்பர் அவர்கள் நிறைவு செய்வார்கள் என்பதில் தடையில்லை.

நம் சங்கத்தின் துணைத்தலைவர் பூலாங்குறிச்சி வ. ராம. வள்ளியப்பச் செட்டியார் அவர்கள் நம்மைத் துயரத்தில் ஆழ்த்திப் பிரிந்தது நம் சங்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அவர்கள் சங்கத்தின் உயிர் நாடியாக இருந்து வந்தார்கள். ஒரு சிறு உதவியும் வேண்டிப் பிறரின் வீட்டு வாயிற்படி மிதிக்காத பண்புடைய அவர்கள் வீடு வீடாக நுழைந்து நம் சங்கத்திற்குப் பெருநிதி சேர்த்தார்கள் என்பதை நம் செயற்குழுவினர் அறிவர். எந்த நேரமும் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும், நம் சமூக முன்னேற்றம் பற்றியுமே எண்ணிக் கொண்டு இருந்தார்கள். அத்தகைய ஓர் ஆர்வலர் நம்மை விட்டு நீங்கியது நமது தவக்குறையேயாகும். அவர்களின் இடத்தில்

காரைக்குடி திரு. மெ. செ. மெ.மெ. மெய்யப்பச்செட்டியார் அவர்கள் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார்கள். பாங்க் ஆப் காரைக்குடியின் அதிபரும் மலேயாத் தொழிலதிபரும் கொடையாளியுமாகிய அவர்கள் நம் சங்கத்திற்குப் பேருதவியாக இருந்து வருவார்கள் என்பதில் ஐயம் என்ன இருக்கமுடியும்?

மதுரை மீனாட்சியம்மை கோவிலின் திருப்பணி வரலாற்றில் நம்மவர் இடம் பெறாத நாளே இல்லை. மதுரை மொட்டைக்கோபுரம் திருக்கல்யாண மண்டபம், பெரிய திருமதில், ஆடிவீதி முதலியவற்றின் திருப்பணிகள் அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தினரால் இலட்சக்கணக்கில் செலவிட்டுச் செய்யப்பெற்றன. சென்ற குடமுழுக்குவிழாவும் மதுரை கூடலழகப்பெருமாள்கோவில் தாயார் சன்னிதித்திருப்பணியும், குடமுழுக்கும் தேவகோட்டை முத்துக்கரு. வெ. அழகப்பச் செட்டியார் அவர்களால் நடத்தப்பெற்றன. இப்பொழுது கோவில் முழுதும் புதுப்பிக்கும் திருப்பணி மக்களின் பணியாக நடைபெற்றுவருவது யாவரும் அறிந்ததே. முன்காலம் போல நம் நிலை இருந்தால் இத்திருப்பணி முழுவதுமே நகரத்தார் மரபினரால் நிகழ்த்தப்பெற்றிருக்கும். ஆனால் பர்மா முதலிய அயல் நாடுகளிலிருந்து நம் பணவரவு தடைப்பட்டதால் இப் புண்ணியச் செயல்களை, நமக்கு விருப்பம் இருப்பினும் செய்ய இயலவில்லை. எனினும் வழிவழியாக வரும் நம் மரபினைக்கைவிடாமல் குடமுழுக்கில் மருந்துசாத்தியாகசாலை நடத்துதல் முதலான தெய்வ நெறிச் சடங்குகளையாவது பிறருக்கு விடாமல் நம் உரிமையாகக் கொண்டு நம் மரபினர் நடாத்த, நம் சங்கத்தின் சார்பில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாமா என்று கருதுகிறோம். அது பற்றி முடிவு செய்து கும்பாபிடேகக்குழு அமைக்கலாமா எனவும் எண்ணியுள்ளோம். இக்கருத்தைக் கண்ணுற்ற ஒவ்வொரு ஊர் நகரத்தார்களும் இவ்வாறே எண்ணினால் அந்தந்த ஊரின் சார்பில் எவ்வளவு தொகை இப்பணிக்கு நன்கொடை சேர்த்துத்தரலாம் என்றும் அதுபோல் பர்மா, மலாயா, இலங்கை முதலிய வெளிநாடுகளில் உள்ள நகரத்தார்களும் எவ்வளவு தொகை தரலாம் என்றும் முடிவு செய்து எங்களுக்கு எழுதினால் அதைத்தலைமேல் ஏற்று ஆவன செய்யக் காத்திருக்கிறோம். அதுபற்றி நாங்கள் பின்னர் அறிவிக்கும்போது மேற்கண்ட குழுவினரிடம் நம்மரபின் ஆண், பெண் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற நன்கொடை யளித்துதவுமாறு வேண்டுகிறோம்.

நம் சமூகத்தின் வளர்ச்சியும் முன்னேற்றமும் நம் சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்வதை ஒட்டியே இருக்கிறது. ஆண்டுதோறும் அதிக உறுப்பினர்கள் சேர்ந்தாலும் இப்போது 971 ஆக உள்ள உறுப்பினர் எண்ணிக்கை போதாது. இவர்களுள் இவ்வாண்டு சந்தாவைப்புதுப்பித்துக் கொண்டவர் 300ம் புதிதாகச்சேர்ந்தவர் 200ம் ஆகமொத்தம் 500பேர் ஆவர் குறைத்தது 500உறுப்பினர்களாவது சேரவேண்டும். வாழ்நாள் உறுப்பினர்களும் ஏராளமாகச் சேர வேண்டும். நம் சங்கம் மதுரையில் அமைந்திருந்தாலும், நம் செட்டி நாடு முழுமைக்கும் உரிமையான சங்கமே இது என்பதை மீண்டும்

வலியுறுத்த விரும்புகிறோம். நம் செயற் குழுவிலும் எல்லா ஊர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்துள்ளோம். ஆதலின் நம் மரபினர் ஒவ்வொருவரும் சங்கத்தின் கல்விப் பணியும் வேலை தேடித்தரும் பணியும் பிற நற்பணிகளும் நன்கு நடைபெற மனமுவந்து ஒத்துழைப்புத்தர வேண்டுகிறோம்.

செயல்கள்

நம் கலைத்தந்தை அவர்களும் இராஜாஜி அவர்களும் நம்மவர்களுக்கு இதுகாறும் தங்கள் கலைக் கல்லூரி, தொழிற் கல்லூரிகளில் படிக்க இடம் கொடுத்து உதவியதற்கு நன்றி தெரிவித்து இனி வரும் ஆண்டுகளிலும் இவ்வுதவியைச் செய்யுமாறு மிக்க பணிவன்போடு வேண்டுகிறோம். நம் சங்கப் புரவலர்களும் மற்ற நிறுவனங்களின் உரிமையாளர்களும் வேலையின்றித்துயருறும் நம் இளைஞர்களுக்கு நம் சங்கத்தின் வாயிலாக வேலை கொடுத்து உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம். அவர்களுக்கு வேலை வேண்டுவோரைப்பற்றிய விவரங்களை நம் சங்கத்திலிருந்து கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். அவர்களுடைய நன்னடத்தைக்கு நம் சங்கம் பொறுப்பேற்றுக்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நம் சங்கத்தின் மேற்பார்வையிலிருந்துவரும் மதுரை வடக்குச் சித்திரை வீதியிலிருக்கும் நகர விடுதிக்கு எவ்வாண்டும் போல் இவ்வாண்டும் வெள்ளையடித்தும், வண்ணம் பூசியும், முன்புறம் வேனிற்காலக் கொட்டகை போட்டும் வசதி செய்துள்ளோம். குறிப்பாக, விடுதியில் வந்து தங்குவோர் தம் மதிப்புமிக்க பொருள்களை வைத்துப் பாதுகாக்கக்கூடிய 12 பேர்கள் ஒரேசமயத்தில் பயன்படுத்தும் சேமப்பெட்டி (Iron Safelocker) வாங்கி வசதி செய்து வைத்துள்ளோம். இதுவந்து தங்குபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருப்பதுடன், வருபவர் இதை விரும்பிக்கேட்டு உபயோகித்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பொதுமக்கள் நாவறட்சியைத் தணிக்கும் பொருட்டு நம் நகர விடுதிக்கு முன்னால் வேனிற் பந்தலின் கீழ்க் குடி தண்ணீர் வசதியும் செய்து கொடுத்திருக்கிறோம்.

மதுரை நகர விடுதியில் குடிதண்ணீர்க் குழாய் வைக்குமாறும், விடுதிக்குப் பக்கத்திலிருக்கும் மலப்புறையை அகற்றுமாறும் மீண்டும் மதுரை நகரவைக்கு விண்ணப்பித்துள்ளோம்.

சென்னை, கிண்டி பொறியியற் கல்லூரியில் பயிலும் கல்லலைச் சேர்ந்த திரு. S. மீனாட்சிசுந்தரத்திற்கு வேந்தன் பட்டி திரு. நா. சுப. நாகப்ப செட்டியார் அவர்களிடமிருந்து 1961-62ம் ஆண்டிற்கு ரூ 200/ திரும்பப்பெறும் உதவித் தொகையாகக் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

சென்ற 10—12—61ல் நம் சங்கச் செயற்குழு உறுப்பினரான திரு. கருமுத்து. தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் தம் துணைவியாருடன் உற்பத்திக் குழுவின் (Productive Council) தூதுவராக அமெரிக்கா, ஐரோப்பா, சப்பான் முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததை முன்னிட்டுத் தேவகோட்டை திரு. உ. ராம. மெ. சுப. சேவு அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமையில் நம் சங்கத்தின சார்பில் ஒரு பாராட்டுவிழாச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் நாம் வேண்டிக் கொண்டதற்கிணங்க நம் உறுப்பினர்கள் தம் குடும்பத்தினரையும் அழைத்துவந்து விழாவைச் சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் 'வாழ்நாள் உறுப்பினர்' களாக ரூ 101| கொடுத்து உதவுமாறு வேண்டிக்கொண்டதற்கிணங்க அவ்விடத்திலேயே ஒன்பதின்மர் சேர்ந்தது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

சென்ற 16—7—61ல் நடந்த ஆண்டு விழாவில் பர்மாவாழ் இந்தியர் தம் தாயகத்திற்கு அனுப்பி வந்த ரூ. 40ஐத் தடை செய்ததைக் கண்டித்து, இந்தியாவுக்கு டி தொகை அனுப்ப வேண்டிய அவசியத்தைத் தெளிவு படுத்தி மறுபடியும் வழக்கம்போல் ரூ. 40 அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு பர்மா அரசினருக்கும், இந்திய அரசினருக்கும் தீர்மானம் நிறைவேற்றி யனுப்பியிருந்தோம். தற்பொழுது முன் போலவே ரூ. 40 அனுப்ப அவர்கள் அனுமதியளித்திருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

அத்துடன் இந்திய அரசினருக்கு, காரைக்குடி தேவகோட்டைப் பகுதியில் தொழிற்பண்ணை (Industrial Colony) ஏற்படுத்தித் தொழில் வளத்தைப் பெருக்குமாறும், மேலூர், தொண்டி வழியாக மதுரையிலிருந்து தேவகோட்டைக்கு இரயில் பாதை அமைக்குமாறும், இராமநாதபுரம் மாவட்டம் வானம் பார்த்த சீமையாக இருப்பதால் தண்ணீர் செதிகுன்றி வாடும் பயிர்களுக்கு மழை பெய்யுங் காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைக்கும் பொருட்டுச் சிறு சிறு அணைகள் கட்டிப் பாசனத்தைப் பெருக்குமாறு சென்னை அரசினரை வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றி மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் அனுப்பியிருந்தோம். இரயில்வே அமைச்சரிடமிருந்து மூன்றுவதுஐந்தாண்டுத்திட்டத்தில் இத் திட்டத்தைச் சேர்க்க நிதி வசதி இடந்தரவில்லை என்று மறுமொழி வந்திருப்பதால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் இத் திட்டத்தைச் சேர்க்க இச்சங்கம் வலியுறுத்துமென ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறோம்.

நாம் இந்திய அரசினரை வேண்டிக் கொண்டதற்கிணங்க காரைக்குடி, தேவகோட்டைப்பகுதியில் தொழிற்பண்ணை நிறுவ அனுமதியளிக்கப்பெற்று, இப்பொழுது அதன் தொடர்பான வேலைகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

பர்மாசங்கத்தார் பர்மாவில் நிலநஷ்டஈட்டுத்தொகை அனுப்ப முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு நம் சங்கத்தை வேண்டிக்கொண்ட தற்கிணங்க, இராமநாதபுரம், மதுரை மாவட்டத் தண்டல் நாயகங் களுக்கு (District Collectos), நில நஷ்ட ஈட்டுத் தொகையை விரை வில் அனுப்பச் சான்றிதழ்கள் அளிக்குமாறு நம் சங்கத்திலிருந்து வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதன்படி ஷியார் இருவரும் நம் கோரிக்கையை ஏற்று ஆவன செய்ததன் பயனைச் சாதகங்கள் பெற்றிருப்பதாக நன்றி தெரிவித்துப் பர்மா சங்கத்தினர் எழுதியிருக் கிருர்கள்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் கல்விநிதி (Educational Trust)யிலிருந்து நம்சங்கத்திற்குக்கல்வி நிதியாகப்பெருத்ததொகை வழங்கியுதவுமாறு எழுதி அதன் நகல்களைமுக்கியமான பிற சங்கங்களுக்கும், மலேயா சங்கங்களுக்கும் அங்குச் செல்வாக்கு பெற்ற நகரத்தார்களுக்கும் நிதி வேண்டி அனுபபியுள்ளோம். நம் வேண்டுகோளை ஏற்று ஷி சங்கங்களும் பெருநிதி வழங்குவார்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறோம். பர்மாவை நம்பி வாழ்ந்த குடும்பங்களுக்குப் பெருத்த நிதி உதவுவதன் மூலம் அவர்களது கண்ணீரைத் துடைத்துத்திருமணமாகாத கன்னிப்பெண்களுக்குத் திருமணமாக உதவியளிக்குமாறும் கல்வி பயிலத் தொடர்ந்து வசதியளிக்குமாறும் பர்மா சங்கத்தினரை வேண்டுகிறோம்.

நாம் தேனூர்ச்சிவகாமி ஆலேயில் ஸ்பின்னர், வைண்டர் களாகச் சேர்த்துவிட்ட நம் சமூகப் பையன்கள் நிரந்தர ஊழிய ராகப் பணி பெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அவ்வாறு அளித்த மீனுக்ஷி ஆலே இயக்குநர் குழுவிற்கும் ஆட்சித்துறைஅதி காரியும் (AdministrativeOfficer) நம் செயற்குழு உறுப்பினருமான மேலேச்சிவபுரி திரு. KR.சேதுராமன் செட்டியார் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

நம் மதிப்புமிக்க புரவலரான திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்களுக்கு அறுபதாவது ஆண்டு நிறைவு பெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்து நம் சங்கச் சார்பாகக் 'கலேத்தந்தை' திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்களால் பொன்னுடை யணிவித்தும், சங்கச் செயலாளர் திரு. ஆவி. க. மெ. அரு. தியாக ராசன் அவர்களால் வாழ்த்து மடல் வாசித்தளித்தும் பெருமை செய்யப்பெற்றது. திரு. அ. மு. மு. முரு அவர்களும் தம் சாந்தி விழா நினைவாக நம் சங்கத்திற்கு நன்கொடையாக ரூ. 1000/- தந்துள்ளார்கள். மேலும் நம் சங்கத்திற்கு இன்னும் பெருத்த தொரு நன்கொடை வாரி வழங்கியும் அவர்கள் நிறுவனங்களில் இன்னும் நம்மவருக்கு நம் சங்கத்தின் மூலம் வேலே கொடுத்து உதவியும் ஆதரவு தருவார்கள் என நம்புகிறோம்.

நம் சங்கத்திலிருந்து இதுவரை 350 பேர்களுக்கு மேல் வேலே வாங்கிக் கொடுத்திருக்கிறோம். தம் நிறுவனங்களில் பணிபுரிய உதவிய மீனட்சி ஆலே, சேலம் ராஜேந்திரா ஆலே, பாங்க் ஆப்

மதுரை, SP. M. மெடிக்கல் மார்ட் முதலிய நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கல்விப் பணியே சிறந்த பணியெனக் கொண்டுள்ள நம் சங்கத்திற்குச் சென்ற ஆறு ஆண்டுகளில் நம் பெருங்குடிச் செல்வர்களிடமிருந்து ரூ 31065/ நன்கொடையாகவும் ரூ 7962/ சந்தாத் தொகையாகவும் பெற்று, இதுவரை 65 மாணவர்கட்கு ரூ 38170/ திரும்பப் பெறும் உதவித் தொகையாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை உவகையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்களுள் இவ்வாண்டு புதிதாக உதவித்தொகை அளிக்கப் பெற்றவர்கள் 20 பேர் ஆவர். அதன் விவரம் பின்வரும் பக்கங்களில் குறிக்கப்பெற்றிருக்கின்றது. இன்னும் தொடர்ந்து இவ்வுதவியை அளித்துவரப் பெருநிதி தேவைப்படுகிறது. அதைத் தாழ்விலாச் செல்வர்கள் தம்மால் இயன்ற பெருத்த நிதி வழங்கி ஆக்கமுறச் செய்வார்கள் என நம்புகிறோம்.

நம் சங்க உறுப்பினரான தியாகராசர் கல்லூரிப் பௌதிகப் பேராசிரியர் புதுவயல் திரு. டாக்டர் VR. இராமநாதன் செட்டியார் அவர்கள் கல்வியாராய்ச்சிப் பணிபுரிய மலேயா நாடு சென்றபோது சங்கச்சார்பில் மதுரைப்பேருந்து நிலையத்தில் சிறப்பாக வழியனுப்புச் செய்யப்பெற்றது. அவர்கள் நம் சங்கத்தின்பால் அன்பு கொண்டு வாழ்நாள் உறுப்பினர் ஆகியதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் அமெரிக்காவில் தொழிற்கல்வி பயின்று விடுமுறையில் திரும்பிய கருமுத்து. தி. சு. சொக்கலிங்கம் அவர்களுக்கு மதுரைப் புகைவண்டி நிலையத்தில் நகரத்தார்களால் சிறந்ததொரு வரவேற்பு அளிக்கப்பெற்றது.

நம் செட்டிநாட்டுப் பகுதிகளில் தற்பொழுது ஓடிவரும் விரைவுப் பேருந்து வண்டிகளை (Express Buses) நல்ல வசதிமிக்க வண்டிகளாக (Super Deluxe) மாற்றித்தருமாறும், வண்டிகளைக் கூட்டுமாறும் நேரத்தைச் சீர்படுத்துமாறும் பெருவழித் துறையினருக்கும் (Regional Transport Office) T. V. S., M. D. T., நிறுவனத்தினருக்கும் எழுதியிருந்தோம். அவ்வாறே நேரத்தைச் சீர் செய்தும் வண்டிகளை அதிகப்படுத்தியும் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பொழுது நம் செட்டிநாட்டில் மொத்தம் எத்தனைபுள்ளிகள் இருக்கிறார்கள் என்று எல்லோரும் தெரிந்து கொள்வான் வேண்டி 9 நகரக்கோவில்களுக்கும் இருமுறை எழுதிக் கேட்டதற்கு இலுப்பக்குடி, நேமங்கோவில், இளையாற்றக்குடி, வைரவன்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து கோவில்களிலிருந்தே விவரம் கொடுத்து உதவினார்கள். அவ்விவரமும் பிறிதொரு பக்கத்தில் காண்க. மற்ற கோவில்களின் புள்ளிவிவரங்களை அடுத்த ஆண்டில் பெற்றுத் தருகிறோம்.

மதுரை நகர விடுதிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 205/- வரி விதிக்கப்பெற்று வந்தது. அது இவ்வாண்டு ரூ. 305/- ஆக உயர்த்தப்பெற்றது. இதைக் குறைக்குமாறு நம் சங்கம் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியால் வரி உயர்வு தள்ளுபடி செய்யப்பெற்று முன்போலவே வரிவிதிக்கப்பெற்றுள்ளது.

நம் சங்கத்தில் உதவித் தொகை பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் M. Sc., பயின்ற தேவகோட்டை SM, வைத்திய நாதன் முதல் வகுப்பில் முதல் தகுதி (First Rank) பெற்றுத் தேறியுள்ளார் என்பதையும் பள்ளத்தூர் AR. அருணாசலம் M. Sc., யில் முதல்வகுப்புப் பெற்றுள்ளார் என்பதையும் காடத்தான்பட்டி SP. பார்வதவர்த்தனி M. B , B. S.,ல் தேர்வு பெற்றுள்ளார் என்பதையும் பட்டமங்கலம் SP. மெய்யப்பன் பாலிடெக்னிக் துறையில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம் நகரத்தார் பெருமக்களைச் சேர்ந்த அன்புக்கிளி என்ற பெண்மணி முதன் முதலாக (M.B.B.S.) மருத்துவத் தொழில் புரிவது போற்றத் தக்கது.

நம் சங்கத்தில் திரும்பப்பெறும் உதவித் தொகை பெற்றுப் பயின்ற கல்லல் திரு. S. மீனாட்சிசுந்தரமும், நாட்டரசன்கோட்டை AV. கண்ணப்பனும் பொறியியலில் முதல் வகுப்பில் தேறியுள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டு, முதல்வர் நீலகிரியில் குந்தா நீர்மின் நிலையத்தில் பணியாற்றி வருகிறார் என்பதையும், இரண்டாமவர் நெய்வேலியில் பணியாற்றி வருகிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நெய்வேலித் திட்டத்தில் நம் சமூக இளைஞர் இருபத்து ஐந்து (25) பேர் பொறியியலராகத் தொண்டு புரிந்துவருகிறார்கள் என்பதையும் அவர்களில் ஐவர் நம் சங்கத்தின் மூலம் உதவி பெற்றுப் படித்து வந்தவர்கள் என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறோம்.

பள்ளத்தூர் உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள் தம் நகரில் பெண்கள் கல்லூரி ஒன்றைத் தொடங்கி நடத்துவதைப் பாராட்டுகிறோம். தேவகோட்டை திரு. அ. ராம. அ. லெ. அ. முத்து வீரப்ப செட்டியாரவர்களும் அவர்கள் இளவல் திரு. அருணாசலம் செட்டியார் அவர்களும் அந் நகரப் பெண்கள் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க ரூ. 35000 வழங்கியுள்ளதை நன்றியுடன் பாராட்டுகிறோம். மற்ற செல்வர்களும் இவர்களைப் பின்பற்றிக் கல்வி வளர்ச்சிக்குப் பொருளுதவ வேண்டுகிறோம்.

'கலைத் தந்தை' கருமுத்து. தியாகராசன் செட்டியார் அவர்கள் இவ்வாண்டு ஆ. தெக்கூரில் விசாலாட்சி தியாகேசர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கியுள்ளார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் (1961) தியாகராசர் பொறியியற் கல்லூரியில் நம் சமூக இளைஞர் 7 பேர்களையும் தற்பொழுது (1962) 6 பேர்களையும் சேர்த்துதவிய கல்லூரி ஆட்சிக் குழுவினருக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரியில் 1961ம் ஆண்டில் ஒரு மாணவரையும், 1962ம் ஆண்டில் இருவரையும் சேர்த்துக்கொண்ட அதன் ஆட்சிக் குழுவினர்க்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கொத்தமங்கலம் M. வள்ளியம்மை B. Sc., B. T. என்பாருக்கும், நம் சங்கத்தின் மூலம் பயின்ற கல்லல் N. மீனாள் (Secondary Grade Training) என்பாருக்கும் நம் சங்கத்தின் மூலமாக மதுரையில் ஆசிரியர் வேலை வாங்கிக் கொடுத்தும் நம் சங்கத்தின் மூலம் பயின்ற நாட்டரசன் கோட்டை KN. சிவலீலா B. Sc . என்பாருக்குச் சிவகங்கை போர்டு உயர்நிலைப் பள்ளியில் வேலை வாங்கிக் கொடுத்துமிருக்கிறோம்.

அண்மையில் 30—7—62உ யன்று நடைபெற்ற நம் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் பொறியியற் கல்லூரி மாணவர்கள் 8 பேருக்கும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் 5 பேருக்கும், M. Sc. பயிலும் மாணவர் இருவருக்கும், M Com., பயிலும் மாணவர் ஒருவருக்கும் B.Sc.,(Chemistry) பயிலும் மாணவர் இருவருக்கும், ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் பயிலும் ஒரு மாணவிக்கும், காந்தி கிராமத்தில் கிராமக் கல்வி பயிலும் ஒரு மாணவிக்கும், ஆராய்ச்சிப் படிப்பிற்கு அமெரிக்கா செல்லும் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் ஒருவருக்கு வழிச் செலவிற்காகவும், ஆக மொத்தம் 21 பேர்களுக்குத் திரும்பப் பெறும் உதவித் தொகையாக ரூ. 11600 கொடுப்பதென வாக்களிக்கப்பெற்று அதில் இவ்வாண்டுக்கு ரூ. 4950 கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பெற்றது.

வேண்டுகோள்.

நகரத்தார்கள் தாங்கள் படித்த பொது நூல்களையும், தங்களுடைய குழந்தைகள் படித்த பழைய பாடப் புத்தகங்களையும் நம் சங்கத்திற்குக் கொடுத்துதவினால், பொது அறிவை வளர்த்துக் கொள்ள உறுப்பினர்களுக்கும், நகர விடுதியில் வந்து தங்குவோருக்கும் பயன் பெறும் வகையிலும், பழைய பாடப் புத்தகங்களை எளிய மாணவர்களுக்குக் கொடுத்துதவும் வகையிலும் சங்க நூல் நிலையம் அமையும் என வேண்டுகோள்விடுக்கிறோம். இதனைச்செவி மடுத்துத் தங்களால் இயன்ற அளவு நூல்களை நம் சங்கத்திற்குக் கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

நன்றி.

நமது சங்கத்தின் வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கியவர் களுக்கும், உறுப்பினர்களைச் சேர்த்து உதவியவர்களுக்கும், நமது வேண்டுகோளுக்கிணங்கிப் பலருக்கு வேலைதந்து உதவிய தொழில் நிலைய அதிபர்கட்கும் திரும்பப் பெறும் உதவித் தொகையளித்த வேந்தன்பட்டி திரு. நா. சுப. நாகப்ப செட்டியார் அவர்கட்கும், இதழ்களை அன்பளிப்பாக அனுப்பிவரும் 'தமிழ்நாடு', 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' நிருவாகத்தினருக்கும், சங்கத்தின் செய்திகளைச் சிறப்பாக அவ்வப்போது வெளியிட்டு உதவிய 'தமிழ்நாடு' ஆசிரியர் திரு. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கட்கும் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற புத்தகத்தை நம் சங்கத்திற்கு அன்பளிப் பாக அளித்த கண்டவராயன்பட்டி திரு. ஆத. சு. சு. முத்தையா செட்டியார் அவர்கட்கும் அருள்கூர்ந்து சங்கத்தின் வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்த 'ரேயான் ட்ரேடர்ஸ்' மதுரைக் கிளையின் நிருவாகி ஆ. தெக்கூர் திரு. AR சேதுராமன் செட்டியார், PR. S. பாங்கர்ஸ் உரிமையாளர் காரைக்குடி திரு N. S. சுப்பிர மணியன் செட்டியார் ஆகியவர்கட்கும், நிதி வசூல் குழுவினருக்கும், ஊதியம் கருதாது அச்சியற்றித்தரும் விசயா அச்சகத்தின் உரிமை யாளர் பள்ளத்தூர், திரு. K. இராமன் அவர்கட்கும், தற்பொழுது பர்மாவிலிருந்து பணம் அனுப்பப் பெரிதும் சிரமமிருந்தும் அதைக் கருதாது சங்க வளர்ச்சியில் ஆர்வங்கொண்டு 50 உறுப் பினருக்குக் கட்டணத் தொகை ரூ. 300/ஐ அனுப்பித்தந்த கம்பை, தனவைசியர் கல்விக்கழகத்தாருக்கும், குறிப்பாக K. சுப்பையா செட்டியார், காந்தி அண்ணமலை செட்டியார், நா. வேலாயுதம் செட்டியார் அவர்கட்கும், செயற்குழு உறுப்பினர் கட்கும், சங்க வளர்ச்சியில் ஆர்வங்காட்டி வரும் அன்புடையோர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்புள்ள,

மதுரை,
22-8-62.

ஆவி. க. மெ. அரு. தியாகராசன் செட்டியார்,
சுப. அண்ணமலை.
செயலர்.

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
1	S. தியாகராஜன் S/o R.M.S. சீனிவாசன் செட்டியார்	கண்டவராயன் பட்டி	(படித்த கல்லூரி) மதுரைத் தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
2	SP. பர்வதவர்த்தினி D/o N. SM. SP. சுப்பிர மணியன் செட்டியார்	காடத்தான் பட்டி	(படித்த கல்லூரி) சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி
3	SM. முத்துக் கருப்பன் S/o கு. சோமசுந்தரம் செட்டியார் 1 தொண்டி யார் வீதி	தேவகோட்டை	(படித்த கல்லூரி) காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறி யியற் கல்லூரி
4	கரு. குப்பான் S/o RM. S. RM. கருப்பையா செட்டியார் 70, RM. S. தெரு	நெற்குப்பை	(படித்த கல்லூரி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
5	SP. சுப்பிரமணியன் S/o PL. சுப்பிரமணியன் செட்டியார், பழனிகோவில் தெரு	நெற்குப்பை	செட்டிநாடு அண்ணா மலைப் பல் தொழிற் பள்ளி
6	S. மீனாட்சி சுந்தரம் S/o N. N. சாத்தப்ப செட்டியார்	கல்லல்	சென்னை, கிண்டி பொறியியற் கல்லூரி
7	லெ. காந்திமதி D/o வயி. லெட்சுமணன் செட்டியார், கரு. வயி. வீடு	கல்லல்	சென்னை G.C.I.M. கல்லூரி
8	S. முத்துச் செல்லப்பன் S/o A. M. A. சடையப்ப செட்டியார்	அரிமளம்	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

(Returnable Scholarship) பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவித் தொகை	திரும்பப் பெற்ற தொகை
ஆசிரியர் பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ. 500	1956-57	ரூ. 500	ரூ. 500
மருத்துவம் (M.B.B.S.)	ஆண்டு 1க்கு	1957-58	ரூ. 718	—
	ரூ. 720 வீதம்	1958-59	ரூ. 720	—
	மூன்று ஆண்டு	1959-60	ரூ. 722	—
	களுக்கு ரூ. 2160			
பொறியியல்	ஆண்டு 1க்கு	1957-58	ரூ. 400	ரூ. 400
	ரூ. 400 வீதம்	1958-59	ரூ. 400	—
	நான்கு ஆண்டு	1959-60	ரூ. 400	—
	களுக்கு ரூ. 1600	1960-61	ரூ. 400	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200	1956-57	ரூ. 200	ரூ. 200
L. C. E பிரிவு	ஆண்டு 1க்கு	1957-58	ரூ. 250	—
	ரூ. 250 வீதம்	1958-59	ரூ. 250	—
	இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 500			ரூ. 500
பொறியியல்	ஆண்டு 1க்கு	1957-58	ரூ. 200	—
	ரூ. 200 வீதம்	1958-59	ரூ. 200	—
	ஐந்து ஆண்டு	1959-60	ரூ. 200	
	களுக்கு	1960-61	ரூ. 200	
	ரூ. 1000	1961-62	ரூ. 200	
G. C. I. M.	ஆண்டு 1க்கு	1958-59	ரூ. 270	—
	ரூ. 270 வீதம்	1959-60	ரூ 270	
	இரண்டு ஆண்டு களுக்கு ரூ. 540			
பொறியியல்	ஆண்டு 1க்கு	1958-59	ரூ. 200	—
	ரூ. 200 வீதம்	1959-60	ரூ. 200	
	நான்கு ஆண்டு	1960-61	ரூ. 200	
	களுக்கு ரூ. 800	1961-62	ரூ. 200	

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம் பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
9	A. சுத்தானந்தன் S/o A. R. அண்ணாமலை செட்டியார்	கடியாபட்டி	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
10	நாக. அண்ணாமலை S/o RM. நாகப்ப செட்டியார்	சண்முகநாத புரம்	(படித்த கல்லூரி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
11	P. L. வள்ளியப்பன் S/o ஆ. ப அரு. பழனியப்ப செட்டியார்	கோனாபட்டு	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
12	VR. சொக்கலிங்கம் S/o S. V. RM. வீரப்ப செட்டியார்	புதுவயல்	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
13	N. ராஜரத்தினம் S/o SP. K. N. N. நாச்சியப்ப செட்டியார் வெளியாரியார் வீடு	கல்லல்	(படித்த கல்லூரி) காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரி
14	S. S. லட்சுமணன் S/o A. S. S. S. சோலையப்ப செட்டியார்	பள்ளத்தூர்	காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரி
15	V. இரத்தினம் S/o A. N. R. வீரப்ப செட்டியார்	செப்பனூர்	(படித்த கல்லூரி) செட்டிநாடு அண்ணாமலைப் பல்தொழிற் பள்ளி
16	பெரி. கதிரேசன் S/o உல. பெரி. மு. பெரியணன் செட்டியார்	வலையபட்டி	(படித்த கல்லூரி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
17	மு. சிவானந்தம் S/o A. L. M. முத்துராமன் செட்டியார்	வேந்தன்பட்டி	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

(Returnable Scholarship)

பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவித் தொகை	திரும்பப் பெற்ற தொகை
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டு களுக்கு ரூ. 800	1958-59 1959-60 1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200 ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200	1958-59	ரூ. 200	ரூ. 200
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200	1958-59	ரூ. 200	ரூ. 200
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200	1958-59	ரூ. 200	ரூ. 200
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1958-59 1959-60	ரூ. 200 ரூ. 200	ரூ. 400
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1958-59 1959-60 1960-61	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	—
L. C. E. பிரிவு	ஆண்டு 1க்கு ரூ 200	1958-59	ரூ. 200	
B. Sc, (Hons.)	ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ. 200	ரூ. 200
B. Com. (Hons.)	ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ. 200	ரூ. 200

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம் பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
18	A. R. லெட்சுமணன் S/o RM. AR. L. அருணாசலம் செட்டியார்	இராயவரம்	சென்னை பச்சையப்பன் கல்லூரி
19	லெ. கண்ணப்பன் S/o PL. லெட்சுமணன் செட்டியார்	காளையார் மங்கலம்	(படித்த கல்லூரி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
20	லெ. நடராசன் S/o வயி. லெட்சுமணன் செட்டியார் கரு. வயி; விடு	கல்லல்	சென்னை G. C. I. M. கல்லூரி
21	பழ. இராமநாதன் S/o சுப. பழனியப்ப செட்டியார் பழ. சுப. விடு	வேகுப்பட்டி	காரைக்குடி அழகப்பா பொறி யியற் கல்லூரி
22	M. கதிரேசன் S/o K. M முத்தையா செட்டியார் A K. M. M. விடு	பூலாங்குரிச்சி	காரைக்குடி அழகப்பா பொறி யியற் கல்லூரி
23	P.R.S.L. சோமசுந்தரம் S/o P.R.S.L.லெட்சுமணன் செட்டியார், கள்ளிக் கோட்டை. சோம. தெரு	தேவகோட்டை	அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி
24	A V. கண்ணப்பன் S/o AR. ஆவிச்சி செட்டியார் 3/57, மெயின் தெரு	நாட்டரசன் கோட்டை	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
25	E. நாராயணன் S/o N. L. லெட்கமணன் செட்டியார் No. 2 ரோடு	வலையபட்டி	மதுரை தியாகராசர் பொறி யியற் கல்லூரி
26	PR. சேது S/o SM. PR. பெரிய கருப்பஞ் செட்டியார்	நெற்குப்பை	மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி

(Returnable Scholarship)
பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவித்தொகை	திரும்பப் பெற்ற தொகை
B. Com. (Hons.)	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1958—59 1959—60	ரூ. 200 ரூ. 200	ரூ. 400
ஆசிரியர் பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ 150	1958—59	ரூ. 150	ரூ. 150
C. C. I. M.	ஆண்டு 1க்கு ரூ. 270	1959—60	ரூ. 270	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ 800	1959-60 1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ. 800	1959-60 1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 400	1959-60 1960-61	ரூ 200 ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1959-60 1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	— —
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ. 800	1959-60 1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	— —
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ 200 வீதம 4 ஆண்டுகளுக்கு ரூ. 800	1959—60 1960—61 1961—62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	— — —

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
27	SP. மீனாக்ஷிசுந்தரம் S/o SP. RM. சுப்பிரமணியன் செட்டியார் மாங்குடியார் வீடு நா. அ. தெரு	தேவகோட்டை	சென்னை லயோலா கல்லூரி
28	பெரி. கற்பகக்கணபதி S/o ஆ. பெரி. பெரிய கருப்பஞ் செட்டியார்	நச்சாந்துபட்டி	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
29	SP. மெய்யப்பன் S/o VR. AS. SP. சுப்பிரமணியன் செட்டியார்	கீழப்பட்ட மங்கலம்	செட்டிநாடு அண்ணாமலைப் பல்தொழிற்பள்ளி
30	S. அழகப்பன் S/o கரு. உ. கரு. சேக்கப்ப செட்டியார்	கல்லல்	செட்டிநாடு அண்ணாமலைப் பல்தொழிற்பள்ளி
31	R. M. கணேசன் S/o S. T. N. RM. இராம சாமி செட்டியார்	கல்லல்	செட்டி நாடு அண்ணாமலைப் பல்தொழிற்பள்ளி
32	லெ. நாகப்பன் 66, வெ. ஊரணிமேல வீதி	தேவகோட்டை	காரைக்குடி அழகப்பா பல்தொழில் நுணுக்கப்பள்ளி
33	ந. சீனிவாசன் S/o KR. A. முத்துநட ராசன் செட்டியார்	ஆ. தெக்கூர்	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
34	C. உண்ணாமலை D/o இராம. சிதம்பரம் செட்டியார் ரெங்கண்ணா தெரு	தேவகோட்டை	மதுரை செயிண்ட் தெரசா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

(Returnable Scholarship)
பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உத வித்தொகை	திரும்பப் பெற்ற தொகை
B. Sc. (Statistics)	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1959—60 1960—61 1961—62	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	— — —
M. Sc.	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ.	1959—60 1960—61	ரூ. 200 ரூ. 200	ரூ. 25
L. C. E.	ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 450	1959—60 1960—61 1961—62	ரூ. 150 ரூ. 150 ரூ. 150	—
L. C. E.	ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 450	1959—60 1961—62	ரூ. 150 ரூ. 150	—
L. M. E.	ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 450	1959—60 1961—62	ரூ. 150 ரூ. 150	—
L. C. E. நிலவியல்	ஆண்டு 1க்கு ரூ. 150	1959—60	ரூ. 150	ரூ. 50
B. A. (Hons)	ஆண்டு 1க்கு ரூ. 150	1959—60	ரூ. 150	ரூ. 150
ஆசிரியர் பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ. 100 வீதம் இரண்டு ஆண்டு களுக்கு ரூ. 200	1959—60 1960—61	ரூ. 100 ரூ. 100	ரூ. 20

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
35	C. சொர்ணவல்லி D/o இராம. சிதம்பரம் செட்டியார் ரெங்கண்ணு தெரு	தேவகோட்டை	குன்றக்குடி ஸ்ரீ முருகன் அருள் நெறி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி
36	K. நாகப்பன் B. E. (Hons)	அரிமளம்	Burdue University Indiana State U. S. A.
37	S. வைத்தியநாதன் B. Sc., 1. தொண்டியார் தெரு,	தேவகோட்டை	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
38	A. M. வள்ளியப்பன் S/o அ. மு. முத்தையா செட்டியார்	கண்டர மாணிக்கம்	செட்டிநாடு அண்ணாமலைப் பல்தொழிற்பள்ளி
39	சுப. விசாலாட்சி D/o மு. வ. சொ சுப. சுப்பிரமணியன் செட்டியார் காலி அழகப்ப செட்டியார் தெரு	தேவகோட்டை	குன்றக்குடி ஸ்ரீ முருகன் அருள் நெறி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி
40	A. லெட்சுமணன்	பொன். புதுப் பட்டி	காரைக்குடி அழகப்பா பல்தொழிற்பள்ளி
41	N. நல்லப்பன் S/o அரு. நா. நல்லப்ப செட்டியார்	கல்லல்	மதுரை தமிழ்நாடு பல்தொழிற்பள்ளி
42	N. மீனாள் D/o அரு. நா. நல்லப்ப செட்டியார்	கல்லல்	மதுரை G. S. T. S.

(Returnable Scholarship)

பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவித் தொகை	திரும்பப் பெற்ற தொகை
ஆசிரியர் பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ. 100 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 200	1959—60 1960—61	ரூ. 100 ரூ. 100	— ரூ. 20
Masters degree in Ele. Engg. (U. S. A. செல்ல பிரயாணச் செலவு மட்டும்)	ரூ. 1200	1960—61	ரூ. 1200	
M. Sc.	ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 500	1960-61 1961-62	ரூ. 250 ரூ. 250	—
Engineering Diploma Course	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200	—
ஆசிரியர் பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 400	1960-61 1961-62	ரூ. 150 ரூ. 150	—
L. M. E.	ஆண்டு 1க்கு ரூ. 300 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 400	1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200	—
Mechanical Engineering	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200	—
ஆசிரியர்பயிற்சி	ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 300	1959-60 1960-61	ரூ. 150 ரூ. 150	—

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
43	P. சிவப்பிரகாசம் S/o சொ. பழனியப்ப செட்டியார் "கணேச நிவாஸ்"	மேலச்சிவபுரி	சென்னை மருத்துவக் கல்லூரி
44	SP. ராஜமாணிக்கம் கரு. லெ. சுப. இல்லம்	மதகுபட்டி	செட்டிநாடு அண்ணாமலைப் பல் தொழிற்பள்ளி
45	பழ. சொக்கலிங்கம் S/o சுப. பழனியப்ப செட்டியார்	வேகுப்பட்டி	சேலம் தியாகராசர் பல்தொழிற் பள்ளி
46	S. நாகப்பன் S/o பி. ஆ. மு. சேது ராமன் செட்டியார் பாலமேட்டுத் தெரு	வலையபட்டி	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சை
47	லெ. காந்திமதி	கல்லல்	மருத்துவக் கல்லூரி, மதுரை
48	லெ. நடராசன்	கல்லல்	மருத்துவக் கல்லூரி, மதுரை
49	K. M. குமரப்பன் S/o மு. கு. மு. குமரப்ப ப. ராம. ப. தெரு.	பள்ளத்தூர்	தியாகராசர் பொறி யியற் கல்லூரி, மதுரை
50	K. L. வள்ளியப்பன் S/o சு.குழ. குழந்தையன் 2/21, முதல் வீதி. சொக்கலிங்கபுரம்	இராயபுரம்	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
51	A. L. சுப்பையா S/o. S. P. அழகப்ப செட்டியார்	ஓ. சிறுவயல்	தியாகராசர் பொறி யியற் கல்லூரி, மதுரை

(Returnable Scholarship)
பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவித்தொகை	திரும்பப் பெற்ற தொகை
B. Pharmacy	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் 4 ஆண்டு களுக்கு ரூ. 800	1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200	— —
Mechanical Engineering	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1960-61	ரூ. 200	—
L. T. M.	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.400	1960-61 1961-62	ரூ. 200 ரூ. 200.	—
M. B. B. S.	ஆண்டு 1க்கு ரூ. 330 விதம் நான்கு ஆண்டு களுக்கு ரூ. 1320	1961—62	ரூ. 330	—
M. B. B. S.	ஆண்டு 1க்கு ரூ. 330 விதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 900	1961—62	ரூ. 330	—
M. B. B. S.	ஆண்டு 1க்கு ரூ. 330 விதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 990	1961—62	ரூ. 330	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ 200 விதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1961—62	ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1961—62	ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	2961—62	ரூ 200	...

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
52	அ. நாகப்பன் பொ. நா. ராம. இல்லம் சேக்கான் செட்டியார் தெரு	குளிபிறை	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
53	K. R. இராமநாதன் அள. சு. இல்லம் 24, வயி. வீர. தெரு	காரைக்குடி	அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி
54	இராம. திருநாவுக்கரசு S/o. சித. பெ. ராம. ராமசாமி செட்டியார்	குளிபிறை	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
55	P. R. கதிரேசன் B. Sc. (Hons) S/o. உல. பெரி. மு. பெரியணன் செட்டியார்	வலையபட்டி	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
56	K. N. சோமசுந்தரம் ராம. அ. அ. சிவ. வீடு.	பாகனேரி	தியாகராசர் கல்லூரி, மதுரை
57	A. R. அருணாசலம் S/o அ. மு. அ. அருணா சலம் செட்டியார்	பள்ளத்தூர்	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
58	KN. சிவலீலா D/o ஆவி. கண. ராம. கண்ணப்ப செட்டியார் 79, வீரகண்டான் தெரு	நாட்டரசன் கோட்டை	புனித சிலுவைக் கல்லூரி, திருச்சி
59	R. வள்ளி D/o வீ. கதிரேச இராம நாதன் செட்டியார்	கீழச்சிவற் பட்டி	தியாகராசர் கல்லூரி மதுரை.
60	அரு. கனகசபை 13, ந. பழ. ந. தெரு	நெற்குப்பை	அழகப்பா பல்தொழிற் பள்ளி காரைக்குடி

(Returnable Scholarship)
பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவி தொகை	திரும்பப் பெற்றஉதவி தொகை
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் நான்கு ஆண்டு களுக்கு ரூ. 800	1961—62	ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் நான்கு ஆண்டு களுக்கு ரூ. 800	1961—62	ரூ. 200	—
பொறியியல்	ஆண்டு 1க்கு ரூ. 200 விதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 600	1961—62	ரூ. 200	—
M. Sc.	ஆண்டு 1க்கு ரூ. 400	1961—62	ரூ. 400	—
M. Sc.	ஆண்டு 1க்கு ரூ 300 விதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62	ரூ. 300	—
M. Sc.	ஆண்டு 1க்கு ரூ 300	1961—62	ரூ. 300	—
B. Sc.	ஆண்டு 1க்கு ரூ. 300	1961—62	ரூ. 300	—
M. A.	ஆண்டு 1க்கு ரூ. 300 விதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62	ரூ 300	—
L. M. E.	ஆண்டு 1க்கு ரூ 200 விதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 400	1961—62	ரூ 200	—

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்
பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	படிக்கும் கல்லூரி
61	கரு. பெ. சே. பெருமாள்	பூலாங்குறிச்சி	அழகப்பா பல்தொழிற் பள்ளி, காரைக்குடி
62	RM. சொக்கலிங்கம் S/o மு. வீர. இராம நாதன் செட்டியார்	பொ. புதுப் பட்டி	அழகப்பா பல்தொழிற் பள்ளி, காரைக்குடி
63	AR. மாணிகம் லெ. அரு. வீடு. சொக்கலிங்கபுரம்	இராயவரம்	அண்ணாமலைப் பல்தொழிற் பள்ளி செட்டிநாடு
64	KR. நாராயணன் "வள்ளுவர் இல்லம்"	அலவாக் கோட்டை	அண்ணாமலைப் பல்தொழிற் பள்ளி செட்டிநாடு
65	அ. மு. வீரப்பன் S/o அ. மு. முத்தையா செட்டியார்	கண்டர மாணிக்கம்	மத்திய பல்தொழிற் பள்ளி, கிண்டி

(Returnable Scholarship)

பட்டியல்

கல்வித்துறை	வாக்களிக்கப் பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப் பெற்ற உதவி தொகை	திரும்பப் பெற்ற தொகை
L. C. E.	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ, 600	1961—62	ரூ 200	—
Civil Engineering	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62	ரூ. 200	—
Common Engineering Diplomo	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ 600	1961—62	ரூ 200	—
L. C. E.	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62	ரூ. 200	—
Civil Engineeriag	ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62	ரூ. 200	—

இதுவரை மொத்தம் வாக்களிக்கப் பெற்ற தொகை ...	ரூ.	38,170
இதுவரை கொடுக்கப் பெற்ற தொகை	ரூ.	26,760
இவ்வாண்டு மட்டும் கொடுக்கப் பெற்ற தொகை ...	ரூ.	8,890
இனி கொடுக்க வேண்டிய தொகை	ரூ.	11,410
இதுவரை திரும்பப் பெற்ற தொகை	ரூ.	3,615
இவ்வாண்டில் மட்டும் திரும்பப் பெற்ற தொகை ...	ரூ.	1,430

நகரத்தார்

25, வடக்குச் சித்திரை

1—1—1961 முதல் 31—12—61 முடிய

1960 ரூ.	ந.பை	வரவு			1961 ரூ.	ந.பை
		ஆரம்ப இருப்பு:				
		பாங்கில் நிரந்தர டிபாசிட்	ரூ.	17048—56		
		" சேமிப்புக் கணக்கில்	ரூ.	1773—14		
		கையிருப்பு ரொக்கம்	ரூ.	67—81		
11574	98			———	18889	51
848	03	வட்டி			887	24
9227	00	நன்கொடை			602	00
		சந்தா முன் ஞ் பாக்கிகள்	ரூ.	339—00		
		" நடப்பு வருடத்துக்கு	ரூ.	2322—00		
		" பின் வருடத்துக்கு	ரூ.	234—00		
1788	00			———	2895	00
		வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் ...			303	00
		கல்யாண மகமை நன்கொடை			463	00
56	00	ஆதாயம்			25	56
1310	00	உபகார நிதியில்			1430	00
195	60	பாராட்டுச் செலவுக்கு வசூல் ...			15	00
